## துயர்மிகு சம்பவத்திலும் எடப்பாடி அரசியல் லாபம் பெறத் துடிக்கலாமா?

## கரூரில் நடந்த கொடுந்துயரத்திற்குக் காரணம் என்ன!

# வெளிப்படைத் தன்மையுடன் இயங்கும் அரசு இது!

### அமைச்சர் தங்கம் தென்னரசு – சமூக வலைதளப் பதிவு!



சென்னை, அக். 2-

நிதி மற்றும் சுற்றுச் சூழல் கால நிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம்தென்னரசின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் வெளியிட்டிருக்கும் அறிக்கை அவரது பதட்டத்தை வெட்ட வெளிச்சமாகக் காட்டியிருக்கின்றது. எவ்வகையிலாவது இத்துயர் மிகு சம்பவத்திலிருந்து அரசியல் லாபம் பெற முடியுமா என்று துடியாய்த் துடிப்பது நாட்டு மக்களுக்கு நன்றாகவே தெரிகின்றது.

செய்தியாளர் சந்திப்பில் உண்மைகள் உணர்த்தப்படும் போது, அவரால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தத்தளித்து வழக்கம் போலவே ஓர் உளறல் அறிக்கையை வெளியிட்டுள்ளார். கரூரில் நடந்த கொடுந்துயரத்திற்குக் காரணம் என்னவென்பதை அரசு அமைத்திருக்கும் ஆணையமும் காவல் துறை விசாரணையும் முறையாக வெளிக்கொணரும் எனச் செய்தியாளர்களிடம் அரசு அதிகாரிகள் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளனர். நடைபெற்ற ஒரு பெரும் துயரச் சம்பவம் குறித்தான உண்மை நிலவரங்களை அரசின் உயர் அலுவலர்கள் நாட்டு மக்களுக்கு விளக்கிச் சொல்வதில் என்ன தவறு இருக்கின்றது? அரசின் முக்கிய அங்கமாக விளங்கும் அதிகாரிகள் பொறுப்புணர்வுடன் அத்தகு விளக்கங்களைச் செய்தியாளர்கள் வாயிலாக வெகுமக்களுக்கும் சென்றடையச் செய்வது இத்தகுச் சூழலில் அவர்களின் கடமை என்பதை எதிர்க்கட்சித் தலைவர் தன் வசதிக்காக மறந்துவிட்டு அறிக்கை வெளியிட்டு இருக்கின்றார்.

நள்ளிரவில் செம்பரம்பாக்கம் ஏரியைத் திறந்து விட்டு, மக்களிடம் விளக்கமளிக்காமல் ஓடி ஒளியும் அதிமுக அரசைப் போல இல்லாமல், வெளிப்படைத் தன்மையுடன் இயங்கும் அரசு இது என்பதைத் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். அரசியல் ஆதாயம் தேடுவதைத் தவிர்த்து, பாதிக்கப்பட்டவர்களின் உணர்வுகளை மதித்து நடந்துகொள்வது எதிர்க்கட்சிகளின் கடமையும் கூட என்பதை அவருக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு தனது வலைதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

### விஜயகுமார் தலைமை!

# ஊராட்சிகளில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்!

### செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ.தொடங்கி வைத்தார்!

செஞ்சி, அக்.2-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் ஒட்டம்பட்டுமாத்தூர் திருகை ஊராட்சியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம் நடைபெற்றது.

செஞ்சி ஒன்றிய பெருந் தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். ஊராட்சி மன்ற தலைவர்கள் பிரேமாதிருமலை, தேவகடாட்சம் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அறிவுறுத்திய முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடர்ந்து முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காண வேண்டும் என அதிகாரிகளுக்கு அவர் தெரிவித்தார்.

முன்னதாக ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமில் அனைத்து துறை சார்பில் பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்து முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம். எல்.ஏ. நேரில் சென்று பார்வையிட்டு பொது மக்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

தொடர்ந்து மக்கள் நல் வாழ்வு மற்றும் மருத்துவ துறை சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச் சத்து பெட்டகத்தினையும், ரத்த அழுத்தம், நீரழிவு நோய், சர்க்கரை, நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருந்துமாத்திரை பெட்டகத்தினையும் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ வழங்கினார்.

முகாமில் ஒட்டம்பட்டு, மாத்தூர் திருக்கை, திருவதி குன்னம், தென்புதுப்பட்டு, காரை,ஆகிய கிராமங்களிலிருந்துஏராளமான பொது மக்கள் வருகை தந்து பல் வேறுகோரிக்கைகள் அடங்கிய மனுக்களை வழங்கி னார்.

நிகழ்ச்சியில் வட்டாரவளர்ச்சி அலுவலர்கள் நடராஜன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை,ஊராட்சி மன்ற தலைவர்கள் சாவித்திரி தயாளன், சிவக்குமார், கலையாசி வெங்கடேசன், ஒன்றிய அவை தலைவர் வாசு, ஒன்றிய துணை செயலாளர் மதியழகன், மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை, நிர்வாகிகள் சக்திவேல், குபேந்திரன்,தேவராஜ், நாகராஜ், ஜெகநாதன்,வேலுச்சாமி, ரவிச்சந்திரன், இளைய பெருமாள், கிருஷ்ணன் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர். துணை வட்டார வளர்ச்சி அலுவலர் அபிராமிஅனைவருக்கும் நன்றி கூறினார்.

### மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக

# சிறப்பாக பணிபுரிந்தவர்கள் - நிறுவனங்களுக்கு விருதுகள்!

### உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தன்று முதல்வர் வழங்குகிறார்!

சென்னை, அக்.2-

மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக பணிபுரிந்தவர்கள் / நிறுவனங்களுக்கு கீழ்க்காணும் மாநில விருதுகள், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், 3.12.2025 உலக மாற்றுத் திறனாளிகள் தினத்தன்று வழங்கப்படவுள்ளது.

1. சிறந்த பணியாளர் / சுயதொழில் புரிபவர்

1. கை, கால் பாதிக்கப்பட்டோர் (LD) அல்லது தொழுநோயிலிருந்து குணமடைந்தோர் (LC), 2. பார்வை திறன் பாதிக்கப்பட்டோர்(VI),

3. செவித் திறன் பாதிக்கப்பட்டோர் (HI),

4. அறிவுசார் குறைபாடுடையோர் (ID),

5. பேச்சு மற்றும் மொழித்திறன் குறைபாடு (SpLaD),

6. Developmental Disorder (புறவுலக சிந்தனையற்றோர்(ASD), குறிப்பிட்ட கற்றலில் குறைபாடு (SLD)],

7. மன நோய் (MI),

8. Disability caused due to blood disorder

இரத்த உறையாமை அல்லது இரத்த ஒழுகு குறைபாடு (He), இரத்த அழிவுச் சோகை (Th), அரிவாளனு இரத்தச் சோகை (SCD)],

9. நாள்பட்ட நரம்பியல் பாதிப்பு திசு பண்முகக் கடினமாதல் (MS), நடுக்கு வாதம் (PD)], 10. பல்வகை குறைபாடு [Multiple Disabilities(MD)]

10 விருதுகள் - 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்.

2 . ஹெலன் கெல்லர் விருது (பார்வைத் திறன் மற்றும் செவித் திறன் குறையுடையோருக்கு கற்பிக்கும் சிறந்த ஆசிரியர்கள் - தலா ஒரு விருது) - 2 விருதுகள் - 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்.

3. சிறந்த ஆசிரியர் - (அறிவுசார் குறைபாடுடையோருக்கு கற்பித்தல்) 1 விருது -10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்.

4. சிறந்த சமூகப் பணியாளர் - 1 விருது - 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்.

5. மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த தொண்டு நிறுவனம் - 1 விருது - 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்.

6. மாற்றுத்திறனாளிகளை அதிக அளவில் பணியமர்த்திய சிறந்த நிறுவனம்- 1 விருது - 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்.

7. ஹெலன் கெல்லர் விருது ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பயிலும் செவித் திறன் குறையுடையோருக்கு கற்பிக்கும் சிறந்த ஆசிரியர் - 1 விருது - 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்.

8. ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பணியாற்றும் சிறந்த ஆசிரியர் (அறிவுசார் குறைபாடுடையோருக்கு கற்பிக்கும் சிறந்த ஆசிரியர்) - 1 விருது - 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்.

9. மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பாக பணியாற்றிய ஓட்டுநர் மற்றும் நடத்துனர் - 2 விருதுகள் - 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்.

10. பொதுக் கட்டடங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான தடையற்ற கட்டமைப்புகளை ஏற்படுத்தியுள்ள சிறந்த அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் - 2 விருதுகள் - 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்.

மொத்தம் 22 விருதுகள். மேற்காணும் விருதுகளுக்கு விண்ணப்பிக்கும் விருதாளர்கள், https://awards.tn.gov.in என்ற வலைத்தளத்தில் 26.10.2025 அன்று பிற்பகல் 5.00 மணிக்குள் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. வலைத்தளத்தில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், விண்ணப்பத்தின் இரண்டு நகல்களை 26.10.2025 அன்று பிற்பகல் 5.00 மணிக்குள் சம்பந்தப்பட்ட மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் ஒட்டம்பட்டு,மாத்தூர் ஊராட்சியில் நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டம் முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ.தொடங்கிவைத்துகர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துடன் கூடிய பெட்டகத்தினை வழங்கினார். உடன்செஞ்சி ஒன்றியச் சேர்மன் விஜயகுமார்,வட்டார வளர்ச்சி அலுவலர் நடராஜன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை,மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை ஆகியோர் உள்ளனர்.



வேளாண்மை உழவர் தலத் துறை அமைச்சர் எம்.ஆர்.பன்னீர்செல்வம், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் ஆகியோர் தலைமையில், நேற்று முன்தினம் (30.09.2025) தலைமைச் செயலகத்தில், “தமிழ்நாட்டில் சம்பா பருவத்திற்கு தேவையான உரம் இருப்பு மற்றும் சீரான விநியோகத்தை உறுதி செய்வது குறித்து” வேளாண்மை மற்றும் கூட்டுறவுத் துறை அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சத்யபிரதாசாகு, வ.தட்சிணாமூர்த்தி, நந்தகுமார், பி.முருகேஷ், பி.குமரவேல்பாண்டியன். மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்

### அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் – கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில்

# வேளாண்மை - உழவர் நலத்துறை - கூட்டுறவுத் துறை - உர உற்பத்தி நிறுவனங்களுடன் ஆய்வுக் கூட்டம்!

சென்னை, அக்.2-

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தலைமையில் ”தமிழ்நாட்டில் சம்பா பருவத்திற்கு தேவையான உரம் இருப்பு மற்றும் சீரான விநியோகத்தை உறுதி செய்வது” குறித்து வேளாண்மை-உழவர் நலத்துறை, கூட்டுறவுத் துறை அலுவலர்கள் மற்றும் உர உற்பத்தி நிறுவனங்களுடன் 30.09.2025 அன்று ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, வேளாண்மை உற்பத்தியினை அதிகரித்திடவும், விவசாயிகளின் நலன் சார்ந்த பல்வேறு திட்டங்களை செயல்படுத்திடவும் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அவ்வகையில் ஒவ்வொரு ஆண்டும் குறுவை சிறப்புத்தொகுப்புத்திட்டம் செயல்படுத்தியது போன்றே நடப்பு ஆண்டிலும் ”குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டம்” 82 கோடியே 77 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் டெல்டா மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருவதுடன், தமிழ்நாட்டில் முதன்முறையாக கார்/ குறுவை/சொர்ணவாரி பருவத்திற்கான ”சிறப்புத் தொகுப்புத் திட்டம்” 132 கோடியே 17 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் டெல்டா அல்லாத மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.

முதலமைச்சர் அவர்களால் மேட்டூர் அணை, குறுவை சாகுபடிக்காக குறித்த தேதியான சூன் 12ஆம் தேதி திறக்கப்பட்டு தொடர்ச்சியாக பாசனநீர் வழங்கப்படுவதன் காரணமாகவும், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் பெறப்பட்ட சாதகமான மழைப்பொழிவின் காரணமாகவும் கார்/ குறுவை/ சொர்ணவாரி பருவத்தில் தற்போது வரை, 17 இலட்சத்து 25 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு, அறுவடைப்பணிகள் நடைபெற்று வருவதுடன், நெல் கொள்முதலும் முழுவீச்சில் மேற்கொள்ளப்படுகிறது.

தற்போது, சம்பா/ தாளடி/பிசானம் பருவ நெல் சாகுபடி மேற்கொள்வதற்கான பணிகள் தீவிரமடைந்துவரும் நிலையில், விவசாயிகளுக்குத் தேவையான உரங்கள் தடையின்றிக் கிடைத்திட தேவையான உரங்களை இருப்பு வைத்தல் மற்றும் சீரான விநியோகம் செய்தல் குறித்து வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் அவர்களும், கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் அவர்களும் இணைந்து நேற்று (30.09.2025) தலைமைச்செயலகத்தில், வேளாண்மை-உழவர் நலத்துறை, கூட்டுறவுத் துறை அலுவலர்கள் மற்றும் உர உற்பத்தி நிறுவனங்களுடன் விரிவான ஆய்வுக்கூட்டம் நடத்தினர்.

நடப்பு ஆண்டு குறுவை (காரீப்) பருவத்தில் ஒன்றிய அரசு வழங்கவேண்டிய யூரியா, டிஏபி, பொட்டாஷ், காம்ப்ளக்ஸ் போன்ற உரங்களில் மீதமுள்ள ஒரு இலட்சத்து 55 ஆயிரம் மெட்ரிக் டன் உரங்களை உடனடியாக வழங்கிட வேண்டியும், சம்பா பருவத்திற்கு கூடுதலாக ஒரு இலட்சத்து 20 ஆயிரம் மெட்ரிக் டன் உரங்களை வழங்கிட வேண்டியும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்தியப்பிரதமர் அவர்களிடம் கடிதம் வாயிலாக வலியுறுத்தினார். அதன் அடிப்படையில், தற்போது 12 ஆயிரம் மெட்ரிக் டன் யூரியா மட்டுமே கூடுதலாக வழங்கப்பட்டுள்ள நிலையில் மீதமுள்ள உரங்களையும் ஒன்றிய அரசு உடனடியாக வழங்க மேலும் வலியுறுத்தப்படும்.

அக்டோபர், 2025 மாத உர விநியோகத் திட்டத்தின்படி உரங்களைப் பெற்று இருப்பு வைக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் சில்லரை விற்பனை நிலையங்களில் மாவட்ட வாரியாக தேவைக்கு ஏற்ப யூரியா உள்ளிட்ட அனைத்து உரங்களையும் எவ்விதக் குறைவுமின்றி முறையாக விவசாயிகளுக்கு விநியோகம் செய்திட அறிவுரை வழங்கப்பட்டது.

மேலும், உர உற்பத்தி நிறுவனங்கள் மாதாந்திர உர விநியோகத் திட்டத்தின்படி தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய உரங்களை உரிய நேரத்தில் வழங்கவேண்டும் என்றும், கூட்டுறவு உரநிறுவனங்களான இஃப்கோ, கிரிப்கோ ஆகியவை மாதாந்திர ஒதுக்கீட்டில் 80 சதவீதத்தை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கும், 20 சதவீதத்தை தனியார் விற்பனை நிலையங்களுக்கும் வழங்கவும் அறிவுறுத்தப்பட்டது. தனியார் உரநிறுவனங்கள் 40 சதவீத உரஒதுக்கீட்டினை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கும், 60 சதவீதத்தை தனியார் விற்பனை நிலையங்களுக்கும் வழங்க அறிவுறுத்தப்பட்டது. தூத்துக்குடியிலுள்ள ஸ்பிக் உர நிறுவனம் தமிழ்நாட்டில் அமைந்துள்ளதால், உர விநியோகத்தில் அந்நிறுவனம் தமிழ்நாட்டிற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

உர விற்பனை நிலையங்களில், விற்பனை முனையக் கருவி (Point of Sale) வாயிலாக மட்டுமே உரங்களை விற்பனை செய்யவேண்டும் என்றும், முறையாக விவசாயிகளுக்கு இரசீது வழங்கிட வேண்டும் என்றும், விற்பனை முனையக் கருவி இருப்பும், உண்மை இருப்பும் சரியாக இருப்பதை உறுதி செய்யவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. மேலும், உரத் தேவை உள்ள விற்பனை நிலையங்களுக்கு / கூட்டுறவு சங்கக் கிளைகளுக்கு கூடுதலாக இருப்பு உள்ள இடங்களிலிருந்து தேவையான இடங்களுக்கு மாவட்டத்திற்குள்ளேயே உரங்களை மாறுதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

இது தவிர, உரத்தேவையினை நிறைவு செய்யும் வகையில் மாவட்டத்திலுள்ள இருப்பை விடக் கூடுதலாக உரங்கள் தேவையிருப்பின் மாவட்டத்திற்கு வெளியிலுள்ள விற்பனை நிலையங்கள் / இருப்பு மையங்களில் தேவைக்கு அதிகமாக உள்ள உரங்களை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

மேலும், சிறப்புக் கண்காணிப்புக் குழுக்களை (Special Inspection Squads) அமைத்து உர விற்பனை நிலையங்களில் திடீர் ஆய்வு மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டதுடன், மானிய விலையில் வழங்கப்படும் யூரியாவை, வேளாண்மை தவிர இதர பயன்பாட்டிற்கு வழங்குதல், கலப்படம் மற்றும் போலி உரங்களை விற்பனை செய்தல், விதிமுறைகளை மீறி உரங்களைப் பதுக்கிவைத்தல் போன்றவை நிகழாமல் தொடர் கண்காணிப்பு மேற்கொள்ளவும், மீறும் பட்சத்தில் சட்டப்படி நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தப்பட்டது. உரங்களை இருப்பு வைத்திருந்தும் ஆறு மாதங்களுக்கு மேல் விற்பனை செய்யாமல் இருக்கும் உர விற்பனை நிலையங்களைக் கண்டறிந்து அவற்றின் உரிமத்தை சட்ட விதிமுறைகளின்படி இரத்து செய்திட அறிவுறுத்தப்பட்டது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் கூட்டுறவு, உணவு (ம) நுகர்வோர் பாதுகாப்பு துறையின் முதன்மை செயலாளர், சத்ய பிரதா சாகு, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர், வ.தட்சிணாமூர்த்தி, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் க.நந்தகுமார், வேளாண்மைத் துறை இயக்குநர் பா. முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ. குமாரவேல் பாண்டியன், மற்றும் தொடர்புடைய துறைகளின் உயர் அலுவலர்கள், மாவட்ட அலுவலர்கள் மற்றும் உர நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு காவல்துறைக்காக – முன்னாள்

# இராணுவப்படைவீரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்பு!

### அரசின் செய்திக் குறிப்பில் தகவல்!

சென்னை, அக்.2-

தமிழ்நாடு காவல்துறைக்காக வெடிகுண்டு கண்டறிதல் மற்றும் செயலிழக்கச் செய்யும் திறன் கொண்ட முன்னாள் இராணுவ வீரர்கள் / முன்னாள் துணை இராணுவப்படை வீரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

தமிழ்நாடு காவல்துறையின் வெடிகுண்டு கண்டறிதல் மற்றும் செயலிழக்க பிரிவுகளில் பின்வரும் பதவிகளில் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் (தேவைப்பட்டால் நீட்டிக்கப்படலாம்) பணிபுரிய முன்னாள் இராணுவ வீரர்கள் / முன்னாள் துணை இராணுவப்படை வீரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன:

(i) ஆய்வாளர் (BDDS) முன்னாள் சுபேதார்/ சுபேதார் மேஜர் - 2 காலியிடங்கள். ஊதிய அளவு - 37,700 1,19,500

(ii) உதவி ஆய்வாளர் (BDDS) முன்னாள் நாயிப் சுபேதார் - 14 காலியிடங்கள்.

ஊதிய அளவு - 36,900 1,16,600

(iii) தலைமை காவலர் (BDDS) முன்னாள் ஹவில் தார்/ நாயக் 43 காலியிடங்கள். ஊதிய அளவு - 20,600 65,500

விண்ணப்பதாரர்கள் பின்வரும் அளவுகோல்களைக் கொண்டிருக்க வேண்டும்.

வயது 01.07.2025 நாளன்று 50 வயதுக்குக் கீழுள்ளவர்கள், கல்வித் தகுதி குறைந்தபட்சம் எஸ்.எஸ்.எல்.சி அல்லது அதற்கு சமமான தேர்ச்சி, தொழில்நுட்ப தகுதி CME, புனே அல்லது NSG அல்லது BCAS ஆல் நடத்தப்படும், குறைந்தபட்சம், 6 வார BDD படிப்பில் தகுதி பெற்றிருக்க வேண்டும், அனுபவம் - இராணுவம் அல்லது துணை ராணுவப் படைகளில் குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் பணி அனுபவம் மற்றும் இந்திய ராணுவத்தின் 261 அல்லது 262 CED பிரிவு அல்லது CME இன் EDD பிரிவு அல்லது NSG இன் BD பிரிவு அல்லது தேசிய வெடிகுண்டு தரவு மையம்NBDC அல்லது விமான நிலையங்களின் BD பிரிவுகளில் ஏதேனும் ஒன்றில் நல்ல திறன் மற்றும் நடைமுறை அனுபவம் மற்றும் களப் பொறியியல் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில், தமிழ் மற்றும் ஆங்கிலம் இரண்டிலும் BDDயை பற்றி பயிற்சி அளிக்கும் திறன் மற்றும் மருத்துவ தகுதி SHAPEI.

தகுதியான விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை சுயவிவரங்கள் (Bio data) மற்றும் கல்விச் சான்றிதழ்கள், டிஸ்சார்ஜ் புத்தகத்தின் தேவையான பக்கங்கள், ஓய்வூதிய ஆணை, BDD தொடர்பான படிப்பு/அனுபவச் சான்றிதழ்கள் ஆகியவற்றின் நகல்களுடன் கூடுதல் காவல் துறை இயக்குநர், செயலாக்கம், மருதம், எண்.17, போட் கிளப் சாலை, இராஜா அண்ணாமலைபுரம், சென்னை - 600 028 என்ற முகவரிக்கு 31.10.2025 க்கு முன் தபால் மூலம் அனுப்ப வேண்டும்.

தகுதியான விண்ணப்பதாரர்கள் மட்டுமே தனிப்பட்ட அழைப்பு கடிதங்கள் மூலம் தேர்வு சோதனைகளுக்கு (சான்றிதழ் சரிபார்ப்பு, எழுத்து மற்றும் நடைமுறை தேர்வுகள் போன்றவை) அழைக்கப்படுவார்கள். இந்த ஆட்சேர்ப்பு, விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது.